ஸ்ரீ:

# அரிய, அற்புதமான புருஷஶ்ரேஷ்டர்

மேல்மா நரஸிம்ஹ ராகவ தாஸன்

श्रीरङ्गनाथशठकोपयतीन्द्रदृष्टं लक्ष्मीनृसिंहशठजित्करुणैकपात्रम् ।
श्रीरङ्गवीररघुराड्शठकोपहृद्यं वेदान्तदेशिकयतीन्द्रमहं प्रपद्ये ॥

ஸ்ரீ உ.வே. ஸலக்ஷண கனபாடி சோகத்தூர் ப. ராமாநுஜாச்சாரியர் ஸ்வாமி மிக விசேஷமான, அரிய மற்றும் அற்புதமான ஒரு புருஷஶ்ரேஷ்டர். இந்த ஸ்வாமி பெங்களூரில் இயங்கும் ஸ்ரீபராங்குஶாசார்ய வைதிக அத்யயன ஸம்ஸ்தையின் நிறுவனரும் அறங்காவலருமாவார். ஸ்ரீராமாநுஜாச்சாரியர் ஸ்வாமி ஸ்ரீவைஷ்ணவ தேசிக ஸம்பிரதாயத்திற்கு ஈடு இணையற்ற மற்றும் அசாதாரண ஸேவைகளை இந்த ஸம்ஸ்தையின் மூலம் வழங்கி வருகிறார். ஸம்ஸ்தையின் இந்த வெள்ளி விழா வெளியீட்டின் முன்பகுதியின் கட்டுரைகளில் இவரது சாதனைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் பற்றிய விளக்கங்கள் உள்ளன.

அனைத்து வித்யாஸ்தானங்களில் - வேதங்கள், வேதாங்கங்கள், ஆழ்வார் அருளிச்செயல்கள், இதிகாசங்கள் போல்வன - இந்த ஸ்வாமியின் முழுமையான திறமை வெளிப்படையாகவும் ஆச்சரியமாகவும் ப்ரகாசிக்கின்றன. தற்சமயம், வைணவ பாரம்பரிய மற்றும் மரபுவழி நடைமுறைகள் மற்றும் அவைகளின் ஸந்தேகங்களுக்கு உண்மையான மற்றும் பூர்வாசார்யர்களின் கருத்துக்களுக்காக இந்த ஸ்வாமியை நாட்டில் அனைவரும் அணுகுகிறார்கள். ஸம்ஸ்க்ருத இலக்கணத்தில் இவரது நிபுணத்துவம் தேசிய அளவில் நன்கு அறியப்பட்டதாகும். பிரபல ஸம்ஸ்க்ருத அறிஞர்கள் இலக்கணத்தின் நுணுக்கமான விஷயங்களில் இவருடைய வழிகாட்டுதலை அடிக்கடி நாடுகிறார்கள்.

தெய்வானுக்ரஹம், ஆசார்யர்களின் கடாக்ஷம் மற்றும் பிறப்புடன் ஒட்டிய திறன்கள், இவைகளை பரிபூர்ணமாக பெற்றுள்ள இம்மஹானுக்கு இணையற்ற ஞானம் இயற்கையாகவே அமைந்திருக்கிறது. வியக்க வைக்கும் ஞாபக சக்தியுடைய இந்த ஸ்வாமி, காலக்ஷேபங்களின் போது கேள்விகளுக்கு பதிலளிக்கும் பாணி மற்றும் சந்தேகங்களைத் தெளிவுபடுத்தும் வகைகள் கேட்பவர்களுக்கு முற்றிலும் புத்துணர்ச்சியூட்டுகிறது.

நாடு முழுவதும் ப்ரபலமான பெயரும் புகழும் பெற்றிருக்கும் இம்மஹானை எண்ணற்ற பட்டங்களும் விருதுகளும் தேடிவந்ததிலோ அல்லது பல மதிப்புமிக்க கவுரவங்கள் இவருக்கு வழங்கப்பட்டதிலோ எந்த வித ஆச்சரியமுமில்லை. இப்படிப்பட்ட மரியாதைகள் மற்றும் தகுதிகள் அங்கீகாரத்தின் மகுடமாக திகழ்ந்தது ஸ்ரீஅஹோபிலமடத்திலிருந்து ஜீயராகும்படி இந்த ஸ்வாமி பெற்ற அதிகாரப்பூர்வமான அழைப்பு. இவைகளைப்பற்றிய முழு விவரங்களை இவ்வெளியீட்டின் முன்பகுதியில் காணலாம். இவர் வேதவாழ்க்கை முறையை கடுமையான அனுஸரிப்புடன் கடைபிடிப்பதை மிக அருகாமையில் ஸேவித்துக்கொண்டிருக்கும் அதிர்ஷ்டசாலி அடியேன்.

ஸம்பிரதாய மற்றும் நவீன கல்விகளில் உயர் மட்ட சாதனைகள் புரிந்துள்ள இம்மஹானை அரசு மற்றும் தனியார் துறைகள் இந்திய பாரம்பரியம், ஸம்ஸ்க்ருதம் மற்றும் கணினிகள் போன்ற பல்வேறு மதிப்புமிக்க குழுக்களில் (பெரும்பாலும் நாட்டு தலைநகர் தில்லியில் கூடும்) உறுப்பினராக நியமித்துள்ளன. இவ்வாறான குழுக்களுக்கு இந்த ஸ்வாமியினுடைய கருத்துக்களும் பங்களிப்பும் விலைமதிப்பற்றது. எனவே இதுபோன்ற கூட்டங்களில் பங்கேற்க பயணம் தேவைப்படும்

போதெல்லாம், அமைப்பாளர்கள் இவருடைய வாழ்க்கை முறையைப் பற்றி நன்கு அறிந்து, அவைகளை மதித்து கூட்டங்களை பிற்பகல் திட்டமிடுவார்கள். ஆகவே தனது நித்யானுஷ்டானங்களையும் அந்தர்யாமியையும் முடித்துக்கொண்டு புறப்பட்டு, கூட்டத்தில் பங்கேற்று அதே நாள் மாலை விமானம் மூலமாக தனது திருமாளிகைக்கு திரும்புவார் இந்த மஹான்.

இவரது மொழியியல் திறன் மிகவும் குறிப்பிடத்தக்கது. ஸம்ஸ்கிருதம், தமிழ், கன்னடம், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஸரளமாக எண்ணிக்கையற்ற சொற்பொழிவுகளை வழங்கியுள்ளதல்லாமல் ஆழமான கட்டுரைகளையும் இம்மொழிகளில் எழுதியுள்ளார். பல்வேறு மதிப்புமிக்க இதழ்களில் இவைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவரின் சில சொற்பொழிவுகளின் சிறப்புத்துளிகளை இங்கு பகிர்ந்து கொள்வதில் அடியேன் மகிழ்ச்சி அடைகிறேன்.

பெரும்பான்மை (concept of majority) என்ற உலகளாவிய கருத்து வேத வாழ்க்கை முறைக்கு எல்லா காலத்திலும், எல்லா விதத்திலும் பொருந்தாது என்பதை பலமுறை தனது உபன்யாஸங்களில் வலியுறுத்துவார். வேதங்களுக்கு முரணான எதுவும், எவ்வளவு பெரும்பான்மையிலிருந்தாலும் முற்றிலும் கண்டிக்கத்தக்கதுமல்லாமல் முழுமையாக நிராகரிக்கப்படவேண்டும் என்று பலவிதமான வேத, வேதாங்க, சாஸ்த்ர, இதிஹாஸ ப்ரமாணங்களுடனும் உதாஹரணங்களுடனும் பரக்க உபன்யஸிப்பார்.

ஒரு மனிதனுடைய உடலுக்கும் புத்திக்கும் நல்லதாகப் படுவது அவனுடைய ஆத்மாவுக்கு நல்லதாகவே இருக்க வேண்டும் என்பது நிர்ப்பந்தம் அல்ல. ஆனால் மாறாக, ஆத்மாவுக்கு நல்லது என்பது புத்தியாலும் உடலாலும் விரும்பப்படவோ அல்லது விரும்பவோ அவச்யமில்லை. இந்த உண்மையை அறிவதோ அல்லது அறிந்து செயல்படுவதோ எளிதல்ல என்று அவ்வப்பொழிது தெளிவாக எடுத்துரைப்பார்.

ஸ்ரீராமாநுஜாச்சாரியர் ஸ்வாமி மற்றொரு குறிப்பிடத்தக்க எச்சரிக்கையையும் அடிக்கடி முன்னிலைப்படுத்துவார். இக்காலங்களில் அச்சிடப்படும் ஸம்பிரதாய புத்தகங்களின் உள்ளடக்கங்கள் முற்றிலும் சரியானவை மற்றும் பிழை இல்லாதவை என்பதற்கு எந்த உறுதியும் இல்லை. இவைகளிலுள்ள தவறுகளை புறக்கணிப்பதோ அல்லது அவை மாற்று உரை (பாடபேதம்) என்று கருதுவதோ தவறான மற்றும் மேலோட்டமான வழி என்பார். ஸம்பந்தப்பட்ட புராதன உரைகளுடன் கவனமாக ஒப்பிடுதல் மற்றும் அந்தத்துரையின் நிபுணர்களுடன் கலந்தாலோசித்தல் போன்ற வழிகள்தான் துல்லியத்தை உறுதி செய்வதற்கான ஒரே வழி என்று வெவ்வேறு மன்றங்களில் பல்வேறு நேரங்களில் எடுத்துரைத்திருக்கிறார். மேலும், மிக முக்கியமாக, வேதங்கள் ஸம்பந்தப்பட்ட ஸந்தேகங்களில் சுத்த பாடத்திற்கு, இதற்காகவே ஏற்பட்ட நூல்களுடன், பூர்ண ஸாங்க ஸலக்ஷண வேதாத்யயனம் செய்துள்ள பண்டிதர்களுடன் ஆலோசித்தல் மற்றும் அவ்விஷயங்களை ஸம்ஸ்கிருத இலக்கணத்துக்கு முரணாகாமல் உறுதிப்படுத்துதல் கட்டாயமான தேவைகள் என்றும் இதற்கு மாற்று முறை இல்லை என்றும் உறுதியாக உபன்யஸிப்பார். 'நான் எனது புத்தகத்தைப் பின்பற்றுகிறேன்' என்ற கொள்கை முழுமையான துல்லியத்திற்கு எப்பொழுதும் ஈடாகாது என்பதை எண்ணற்ற சந்தர்ப்பங்களில் எடுத்துக்கூறியுள்ளார்.

மனத்தாழ்மையும் நன்றியுணர்வும் மிகப்பெரிய மற்றும் அஸாதாரண நல்லொழுக்கங்கள். இந்த நற்பண்புகளைக் கொண்டிருக்கும் நபரை இவைகள் ஒருபோதும் தோல்வியடையச் செய்யாமல் இறுதியில் வெற்றியையே அளிக்கும் என்று அவ்வப்போது நினைவூட்டுவார். இந்த ஸ்வாமி எப்போதும் தனது பிரதாமாச்சாரியன், அதாவது, தனது தகப்பனார் ஸ்ரீ சோகத்தூர் பராங்குசாச்சாரியர் ஸ்வாமி, ப்ராசாரியன் ஸ்ரீ தில்லஸ்தானம் ஸ்வாமி இவர்களின் வைபவங்களையும் குணாதிசயங்களையும்

உற்சாகமாகவும் உணர்ச்சி வசப்பட்டும் திணறிய குரலுடனும் கண்ணீருடன் உபன்யஸித்ததை அடியேன் ப்ரத்யக்ஷமாக பலமுறை அனுபவித்திருக்கிறேன். என்னே ஸ்வாமியின் ஆசார்யபக்தி!

ஸ்ரீபராங்குஶாசார்ய வைதிக அத்யயன ஸம்ஸ்தையின் இணையதளத்தில், இவர் கற்பிக்கும் மற்றும் சேமித்து வைத்திருக்கும் அனைத்து நூல்களின் முழுமையான தூய்மையையும் மற்றும் துல்லியத்தையும் உறுதி செய்வதில் இவரின் சளைக்காத மற்றும் கடின முயற்சிகள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்திக்கொண்டிருக்கிறது. மிகவும் பாராட்டத்தக்க பொறுமையுடன் எளிய நிறுத்தக் குறியீடுகளுக்குக்-கூட (punctuations) அவரது கவனம் ஆச்சரியகரம்.

தேசிக ஸம்பிரதாயத்தை கடைபிடித்தல், பரப்புதல் மற்றும் வேத வாழ்க்கை முறைகளை கண்டிப்பாக பின்பற்றுதல் இந்த ஸ்வாமியின் அன்றாட வாழ்க்கையில் நன்கு நிலையாயுள்ளது. உபதேசங்களை நடைமுறையில் பின்பற்றுதல் பொதுவானதுமல்ல, எளிதானதுமல்ல. கடினமும் கூட. ஆனால் இந்த ஸ்வாமி கூறும் அறிவுரைகள் அனைத்தையும் இவரது நித்யாநுஷ்டானங்களிலும், தினசரி வழக்கங்களிலும், நடவடிக்கைகளிலும் நேராக காணலாம்.

இப்படிப்பட்ட ப்ரபல மஹானை, பரம பகவத்க்ருபையாலும், ஆசார்யானுக்ரஹத்தாலும் மற்றும் பாகவதர்களுடைய ஆசீர்வாதத்தாலும், அம்மானாக அடியேன் அடைந்திருக்கிறேன். இந்த அரிய புருஷஶ்ரேஷ்டருக்கு இரத்த உறவினனாக இருப்பதில் அடியேன் மிகப்பெருமையும் அடைகிறேன். இவருடைய அற்புதமான தயவையும் கருணையையும் அடியேனது வருடாந்தர இந்தியா வருகைகளின் போது சிறிய காலத்தில் பெருமளவில் பலவாறு பெற்றிருக்கிறேன்.

அடியேனுடைய குறைந்தபட்ச வேத கல்வி மற்றும் பலவீனமான ஸம்ஸ்கிருத திறன் இவைகளை பொருட்படுத்தாமல், வாரக்கணக்கில் அவரது தொழில்முறை நாட்களில் விடுமுறை எடுத்துக்கொண்டு இரவும் பகலும் இந்த மஹான் க்ருஷ்ண யஜுர் வேத ஸம்ஹிதையை ஸந்தை முறையில் அடியேனுக்கு கற்பித்து பூர்த்தி செய்தார். (அடியேனுடைய திருத்தகப்பனா (வைகுண்டவாஸி ஸ்ரீ உ.வே. மேல்மா திருமலாச்சாரியர்) ரிடத்தில் சிறுவயதில் ஆரம்பித்த வேதாத்யயனம் அவருடைய அகால பரமபதப்ராப்திக்குப் பிறகு தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் முப்பது வருடங்களுக்கும் மேலாக நின்றுவிட்டது). ஸந்தை ஸமயங்களில் உடல் அசதி மற்றும் சிரமம் வெளிப்படையாக இருந்தாலும், வேதம் மற்றும் வேத கலாச்சாரத்தை கற்பிக்க இந்த ஸ்வாமியின் உள்ளார்ந்த உறுதியும் ஆர்வமும் முன்னுரிமை பெற்று வந்தது. ஸந்தைகளின்போது ஸ்வரம் மற்றும் சப்த சுத்தம் ஆகிய இரண்டையும் உறுதி செய்ய வேண்டிய முக்கியமான நுணுக்கங்களை அவ்வப்பொழுது முன்னிலைப்படுத்தி நினைவில் நிற்கும்படி அனுக்ரஹிப்பார். இப்படிப்பட்ட வேதாசிரியனுடைய ஷிஷ்டியப்தபூர்த்தியின் பூர்வாங்கமாக அவரிடம் பூர்த்தியான வேதம் முழுவதையும் அவருடனேயே சேர்ந்து பாராயணம் செய்யும் பாக்யமும் அடியேனுக்கு கிடைத்தது. அடியேனுடைய அறிவற்ற மற்றும் எண்ணிக்கையில்லா அன்றாட ஸந்தேகங்களையும் தயக்கமின்றி விருப்பத்துடன் இன்றும் தீர்த்து வைத்துக்கொண்டிருக்கிறார் இந்த அரிய, அற்புதமான புருஷஶ்ரேஷ்டர்.

ஸ்ரீ உ.வே. ராமாநுஜாச்சாரியர் ஸ்வாமி ஒரு அசாதாரணமான ஞானக்களஞ்சியம் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. இத்தகைய சிறந்த மஹானுக்கு நன்றி செலுத்த ஒரே வழி அடியேனுடைய குறைந்த வாழ்நாள் முழுவதும் அவரது நிழலைப் பின்தொடருவது, முடிந்தவரை அவருடைய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவது மற்றும் அவரது சிறந்த மற்றும் வளர்ந்து கொண்டிருக்கும் ஸம்பிரதாய பணிகளுக்கு முடிந்த அளவில் எல்லா விதத்திலும் உதவுவதேயாகும். இப்படிப்பட்ட மனப்பக்குவம் அடியேனிடத்தில் என்றும் நிலைபெற ஆசீர்வதிக்கும்படி மதிப்பிற்குரிய அம்மான் ஸ்வாமியையும் மற்றும் அனைத்து

பாகவதர்களையும் வேண்டுகிறேன். மந்த புத்தியான அடியேனுடைய தவறுகளை க்ஷமித்தருளும்படி ப்ரார்த்திக்கொண்டு ஸ்ரீ உ.வே. ராமாநுஜாச்சாரியின் திருவடிகளில் இந்த கட்டுரையை ஸமர்ப்பித்து க்ருதார்த்தனாகிறேன்.

அடியாரடியாரின் அடியான்

श्रीमते श्रीवण्शठकोपश्रीवेदान्तदेशिकयतीन्द्रमहादेशिकाय नमः ।
श्रीमते श्रीपराङ्कुश रामानुजाचार्याय नमः ।

*Sri Melma Tirumalachar Raghavan (b. 1959) had his upanayanam in time and studied ubhaya vedantam and is a meritorious Commerce Graduate from MES College, Malleswaram, Bangalore. He also attended all the kalaksepams [including Sribhashyam] at Bangalore, of Sarasarajna, Mahavidvan (Late) Sri. U.Ve. Perukkaranai Svami, Asthana Vidvan of Sri Ahobila Matam. He joined UN Administrative division, serving in various countries, being stationed at UN headquarters at New York for much of the later part of his professional career and eventually retired from there voluntarily in 2019. He is the main donor for PIVS.*